பரங்கிப்பேட்டை சிறு துறைமுகம்.

திரு. கே. ராஜாராம் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) : மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கடந்த ஐந்து ஆண்டுகளில் பரங்கிப்பேட்டை சிறு துறைமுகம் வழியாக சரக்கு ஏதேனும் அனுப்பப்பட்டுள்ளதா ?

(இ) இல்லையெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : (அ) இல்லை.

(இ) கப்பல்கள் இங்கே நிற்பதில்லை.

Sugar Cane Cess.

* 156. Q.—Thiru P. THIRUGNANASAMBANDAM : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) the amount collected by way of Sugarcane Cess from the Sugar Mills in this State during 1970–71;

(*b*) whether any Sugar Mill has not yet remitted the Sugar Cane Cess ; and

(*c*) if so, the details thereof?

கரும்பு செஸ்.

திரு. பி. திருஞானசம்பந்தம் : மாண்புமிகு வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.

(அ) மாநிலத்தில் உள்ள சர்க்கரை ஆலைகளின் 1970–71 ஆம் ஆண்டிற்கான கரும்பு செஸ் (Sugarcane cess) மூலம் வசூலான தொகை எவ்வளவு ?

(இ) எந்த ஆலையாவது கரும்பு செஸ் sugarcane cess செலுத்தாமல் உள்ளதா ?

(உ) ஆமெனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) இம் மாநிலத்தில் உள்ள சர்க்கரை ஆலைகளிடமிருந்தும் கேரள மாநிலத்தில் உள்ள சித்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையிடம் இருந்தும் 1970–71 ஆம் ஆண்டில் கரும்புத் தீர்வையாக ரூ. 29,05,983.30 வசூலிக்கப்பட்டுள்ளது.

1972 ஆகஸ்ட் 21]

(இ) ஆம். தமிழகத்திலுள்ள பதினாறு ஆலைகளில் ஒன்பது ஆலைகள் கரும்புத் தீர்வை செலுத்தாமலுள்ளன. கேரள மாநிலத்தில் உள்ள சித்தூர் கூட்டுறவு ஆலையிலிருந்தும், இதர ஆலைகளில் இருந்தும் நிலுவையிலுள்ள நிகர கரும்புத் தீர்வை மொத்தம் ரூ: 1,53,74,028-84 (ரூபாய் ஒருகோடியே ஐம்பத்து மூன்று லட்சத்து எழுபத்திநான்காயிரத்து இருபத்தெட்டும் பைசா எண்பத்து நான்கு மட்டும்) உள்ளது.

(உ) அதன் விவரம் :—

(1)	உடுமலைப்பேட்டை ஆலை	6,47,227-22
(2)	படாளம் ஆலை	6,08,996-14
(3)	ஆம்பூர் ஆலை	12,31,720-81
(4)	மோகனூர் ஆலை	7,89,016-95
(5)	புகலூர் ஆலை	17,82,558-02
(6)	பேட்டைவாய்த்தலை ஆலை	11,62,197-42
(7)	வடபாதிமங்கலம் ஆலை	9,66,748-16
(8)	காட்டூர் ஆலை	5,30,455-58
(9)	பாண்டியராஜபுரம் ஆலை	3,21,207-73
(10)	நெல்லிக்குப்பம் ஆலை	21,11,919-27
(11)	ஆப்பக்கூடல் ஆலை	12,50,521-18
(12)	முண்டியம்பாக்கம் ஆலை	13,03,337-35
(13)	பெண்ணாடம் ஆலை	8,01,810-94
(14)	அலங்காநல்லூர் ஆலை	9,48,118-14
(15)	கள்ளக்குறிச்சி ஆலை	7,16,250-30
(16)	சித்தூர் (கேரளா)	2,01,943-63

திரு. கே. ராஜாராம் : தலைவர் அவர்களே, அநேகமாக தமிழ் நாட்டிலுள்ள எல்லா ஆலைகளிலும் பாக்கி இருப்பதாகத் தெரிகிறது. அதை வசூல் செய்வதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவர் அவர்களே, அதற்கான நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறோம்.

THIRU A. R. DAMODARAN : May I know, Sir, whether any penal interest is charged for these arrears of Sugarcane Cess Fund due from the various sugar factories ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவர் அவர்களே, ஏதும் வட்டி போடப்படவில்லை.

[1972 ஆகஸ்ட் 21

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : தலைவர் அவர்களே, இப்பொழுது சர்க்கரை ஆலைத் தொழில் லாபகரமாக நடக்கிறது என்று கேள்விப்பட்டோம். ஆப்பக்கூடல் ஆலையில் $1\frac{1}{2}$ கோடி ரூபாய் வரையில் லாபம் கிடைத்து 50 லட்சம் ரூபாய் போனஸாக, டிவிடெண்டாகக் கொடுத்திருக்கிறார்கள். கரும்பு உற்பத்தியாளர்களுக்கு கூட டன் ஒன்றுக்கு ரூ. 85-க்கு மேல் பத்து ரூபாய் போனஸ் கொடுத்திருப்பதாகக் கூறப்படுகிறது. அவர்களுடைய பொருளாதார நிலைமை நல்லபடி இருக்கின்றபோது, வசூல் செய்வதைத் துரிதப்படுத்துவது நல்லதல்லவா என்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, 1960–61-ஆம் ஆண்டில் இந்த ஆலைகளில் உற்பத்தி செய்யப்பட்ட சர்க்கரை மூட்டைகள் அப்பொழுது தேங்கிக் கிடந்து விட்டன. சர்க்கரை சரிவர விற்கவில்லை என்ற காரணம் காட்டி, தொடர்ந்து அதையே வலியுறுத்தி வருகிறார்கள். அதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டுமானால், சட்டத்தைத் திருத்த வேண்டியிருக்கிறது. தேவையான நடவடிக்கை எடுத்து வசூல் செய்யப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

THIRU A. R. DAMODARAN : May I know, Sir, what is the law that prevents the collectoni of sugarcane cess from the sugar factories ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, இதை எவ்வளவு சீக்கிரத்தில் முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் அரசாங்கம் வசூலிக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கான நடவடிக்கையில் அரசாங்கம் ஈடுபட்டிருக்கிறது. சென்ற ஆண்டு விலை போகவில்லை. அதன் காரணமாகத் தேங்கியிருந்தது. இந்த ஆண்டு உற்பத்தி பெருகி லாபகரமாக இருக்கிறது. நிச்சயமாக இந்தப் பணம் வசூல் செய்யப்படுவதற்கான நடவடிக்கை விரைவில் எடுக்கப்படும்.

THIRU A. R. DAMODARAN : The figures given by the Hon. Minister pertain to 1970–71 and presumably Rs. 1.69 crores is due even up to May 1971. May I know, Sir whether the same position continues for 1971-72 also ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவர் அவர்களே, 1972-ல் ஒரு கோடியே எழுபத்தி நான்கு லட்சம்

திரு. எல். பலராமன் : தலைவர் அவர்களே, இந்தக் கரும்பிலிருந்து வரும் செஸ் பணத்தைக் கொண்டு சர்க்கரை ஆலைக்குப் போவதற்கான சாலை போன்ற வசதிகள் செய்து கொடுப்பதற்குச் செலவு செய்யப்படும் என்று தீர்மானிக்கப்பட்டு இருந்தாலும், பல இடங்களில் இந்த சாலைகள் சீர் செய்யப்படாமலேயே இருந்து வருவதை அரசு அறியுமா, அதற்குக் காரணம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவர் அவர்களே, அநேகமாக இந்த செஸ் பணத்தைக் கொண்டு ஆலைகளுக்கு வசதிகள், ரோட்டு போன்ற வசதிகள் செய்து தரவேண்டும் என்று இருப்பது உண்மைதான். கொடுக்க வேண்டிய பாக்கியையே கொடுப்பதற்கு அந்த ஆலைகள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இப்போது அதில் அதிகமாக ஏதும் செய்ய இயலாது என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு குறிப்பிட்ட இடத்தைப் பற்றி உறுப்பினர் அவர்கள் மனதில் வைத்துக் கொண்டு கேட்கிறார். தனிக் கேள்வி போட்டால் அதற்கு விடை அளிக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

Sugarcane Producers.

* 157 Q.—THIRU K. RAJARAM (on behalf of THIRU V. ISVARMURTI) : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether the Government of India have issued instructions to the State Government to launch prosecutions against Sugar Mills Owners for dues to be paid to sugarcane producers ; and

(b) if so, the details thereof?

கரும்பு உற்பத்தியாளர்கள்.

திரு. கே. ராஜாராம் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) . மாண்புமிகு வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சர்க்கரை ஆலைச் சொந்தக்காரர்கள் கரும்பு உற்பத்தியாளர்களுக்குக் கொடுக்க வேண்டிய தொகைகளைக் கொடுக்காமலிருப்பது குறித்து அவர்கள்மீது வழக்குத் தொடருமாறு மாநில அரசுக்கு இந்திய அரசு கட்டளைகள் பிறப்பித்துள்ளனவா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

TRUTH ALONE TRIUMPHS